**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW7<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Kanniyammal |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 27th day of July, 2026.

**(Accused absent, Petition filed and allowed.)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.27 மணி

நான் தற்போது பழவேற்காட்டில் வசித்து வருகிறேன். 30-04-2021 அன்று மாலை 4.30 மணிக்கு என்னுடைய பெரியம்மா மகள் சிவரஞ்சினிக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விபட்டு சென்று பழவேற்காட்டில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று

பார்த்தேன். அப்போது 2 போலீசார் இருந்தார்கள். நடந்த சம்பவத்தை பற்றி சிவரஞ்சினி போலீசாரிடம் கூறினார் அப்போது நான் உடனிருந்தேன். சிவரஞ்சினியையும், என்னையும், வினோதினியையும் Forest Office காம்பவுண்ட் வால் அருகில் அழைத்து சென்றார்கள். அங்கு சேறாக இருந்தது. சிவரஞ்சினி அவருடைய உடைகளை அடையாளம் காட்டினார். சிவப்பு நிற நைட்டி, பச்சை நிற பாவாடை, லைட் பச்சை நிற பிரா, வெள்ளை நிற கருப்பு கோடு போட்ட சர்ட் ஆகியவற்றை போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். ஆடைகளை கைப்பற்றியதற்கு என்னை சாட்சியாக இருக்க கூறி போலீசார் என்னிடமும், வினோதினியிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வெள்ளை நிற கருப்பு கோடு போட்ட சர்ட் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. **அ.சா.பொ.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை சிவரஞ்சினியை பார்க்கும்போது விசாரித்தார்கள். எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் 30-04-2021 அன்று விசாரித்தார்கள். என்னை விசாரித்து யார் எழுதிக் கொண்டார்கள் என்றால் டிஎஸ்பி மேடம் விசாரித்தார்கள். 2 போலீசார் வந்தார்கள். யார் எழுதினார்கள் என்று தெரியாது. இந்த வழக்கில் சாட்சியம் அளித்த சின்னராசு என்னுடைய கணவர். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த ராஜா எனக்கு உறவினரா என்றால் எனக்கு தெரிந்தவர். நான் எதற்காக சம்பவயிடம் சென்றேன் என்றால் சிவரஞ்சினியை பார்க்க சென்றோம். அப்போது போலீசார் அங்கு இருந்தார்கள். அவர்கள் என்னையும், சிவரஞ்சினியையும், வினோதினியையும் அழைத்து சென்றார்கள். உடைகள் கைபற்றிய இடத்தில் போட்டோ, வீடியோ எடுத்தார்களா என்றால் இல்லை. சிவப்பு நிற நைட்டி, பச்சை நிற பாவாடை, லைட் பச்சை நிற பிரா, வெள்ளை நிற கருப்பு கோடு போட்ட சர்ட் ஆகியவை என்ன நிலையில் இருந்தது என்றால் கிழிந்த நிலையிலும் சேறும் சகதியுமாக இருந்தது. சம்பவம் நடந்த விவரம் எனது கணவர் என்னிடம் சொல்லியதால் சம்பவம் பற்றி

எனக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வரும்போது தெரியும். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. எந்த மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் என்னிடம் கையொப்பம் வாங்கிய பிறகு எழுதினார்களா என்றால் எழுதிய பிறகு தான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு விஷயமாக நான் காவல் நிலையம் செல்லவில்லை. இந்த வழக்கை வலுவூட்டுவதற்காக எங்கள் முன்னிலையில் உடைகளை கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு சென்றபோது என்னுடன் சிவரஞ்சினியும், வினோதினியும் எவ்வாறு சென்றோம் என்றால் நடந்து சென்றோம். அங்கு போலீசார் 2 பேர் வந்தார்கள். என்னுடன் வந்த போலீசார் 2 பேரும் பெண் போலீசார் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் சீருடையில் வந்திருந்தார்கள். அன்றைய தினம் வினோதினி நைட்டி போட்டிருந்தார். பச்சை நிற நைட்டி போட்டிருந்தார். சிவரஞ்சினி என்ன உடை அணிந்தார். நைட்டி அணிந்திருந்தார். என்ன நிறம் என்று தற்போது ஞாபகமில்லை. உடைகளைகைப்பற்றிய இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் எனறால் சுமார் அரைமணி நேரம் இருந்தோம். அந்த 2 பேரும் போலீசார் எந்த ரேங்க் என்றால் ஒருவர் டிஎஸ்பி ஆவார். 2 போலீசாரும் ஜீப்பில் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். கைப்பற்றுதல் மகஜரில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் பழவேற்காடு Forest office அருகில் நினறுகொண்டு பேட் வைத்து எழுதினார்கள். எழுதும்போது பேட் வைத்து எழுதினார்கள். டிஎஸ்பி எழுதினார்களா என்றால் இரண்டுபேரில் ஒருவர் எழுதினார். அதில் என்ன எழுதியிருந்தது என்று நா'ன படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பொருட்களை கைப்பற்றியதற்காக கையொப்பமிட வேண்டும் என்று சொன்னார்கள். சிவரஞ்சினி முட்புதரில் ஒரு ஆண் நபருடன் பேசிக்கொண்டிருந்த போது அதை பார்த்த எதிரி ஊரில் கூறியவுடன் ஊரில்

இருந்த மக்கள் சிவரஞ்சினியை அடித்து சேற்றில் தள்ளி அவருக்கு காயம் உண்டானது பற்றி கேள்விபட்டேனா என்றால் இல்லை. அது சரியல்ல. ஜெய்சங்கர் என்னுடைய உறவினரா என்றா'ல இல்லை. இன்றைய தினம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அவர் அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவர் கூறியதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.